**சுருக்கம்**

சிலை அமைத்தல் – வேலூர் மாவட்டம், தாராபடவேடு மூன்றாம் நிலை நகராட்சி அலுவலக வளாகத்தில் "பேரறிஞர் அண்ணா" அவர்களின் வெண்கலத்தினாலான முழுவுருவச் சிலை நிறுவ அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை(நிலை) எண்.89 நாள் 11.5.2010

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை, நாள் 20.11.1998.

மேலும் படிக்க:

2. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க. எண். சி3/ 2647/ 2010, நாள் 31.3.2010.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.62466/ 2009/எம்.2, நாள் 23.4.2010.

-----

**ஆணை:**

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது இரண்டாவதாக படிக்கப்பட்ட செயற்குறிப்பில், வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் தாராபடவேடு நகராட்சி செயல் அலுவலர் கடிதத்தில், தாராபடவேடு நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில், நத்தம் சர்வே எண்.533/14 0.16 ஏக்கர் விஸ்தீரணத்தில் பிரதான நுழைவு வாயில்களுக்கு இடையில் 3 அடிஅகலம், 3அடி நீளம், 4 அடி உயர பீடத்தில் 2 ½ x 2 ½ அடி அளவுள்ள "பேரறிஞர் அண்ணா" திருஉருவ சிலை நிறுவிட, நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றி, அதன் செலவினம் முழுவதும் தாராபடவேடு வருவாய் நிதியில் மேற்கொள்வதாகவும், எனவே சிலை நிறுவிட அரசுக்கு பரிந்துரை செய்யக் கோரியுள்ளளதாகவும், வேலூர் மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரும் மேற்படி நகரமன்ற தீர்மானத்தின்படி, தாராபடவேடு மூன்றாம் நிலை நகராட்சி செயல் அலுவலர் அனுப்பியுள்ள பிரேரணையினை பரிந்துரை செய்யலாம் என தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

2. வேலூர் வருவாய்கோட்ட அலுவலர் தனது அறிக்கையில், தாராபடவேடு மூன்றாம்நிலை நகராட்சி அலுவலக வளாகத்தில், பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலை அமைப்பதினால் சட்டம் ஒழுங்குப் பிரச்சனை மற்றும் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என தெரிவித்து, மேற்படி சிலையை நிறுவலாம் என பரிந்துரை செய்துள்ளதாகவும், மேலும், வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனதறிக்கையில், மேற்படி சிலையை அமைப்பதினால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு இல்லை எனவும், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்பில்லை என தெரிவித்துள்ளதாகவும் இருப்பினும், பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலை அமைக்க கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

அ) சிலை நிறுவும்போது உறுதியான கட்டுமானத்தன்மையுடன் சிலைக்கு எவ்வித குந்தகமும் ஏற்படா வண்ணம் பாதுகாப்புத் தன்மையுடன் நிறுவப்பட வேண்டும்.

ஆ) மேலும் உள்ளாட்சி அமைப்புகளில் சிலை, நினைவுத் தூண் போன்றவை அமைப்பது குறித்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை, அரசாணை நிலை எண். 221, நாள் 20.11.1998–ல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி சிலையை நிறுவலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்காணும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வேலூர் மற்றும் வேலூர் வருவாய் கோட்ட அலுவலர் ஆகியோர்களின் பரிந்துரைகளை ஏற்று, வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், தாராபடவேடு நகராட்சி அலுவலக வளாகத்தில், நத்தம் சர்வே எண்.533/14, 0.16 ஏக்கர் விஸ்தீரணத்தில் பிரதான நுழைவு வாயில்களுக்கு இடையில் 3 அடி அகலம் 3 அடி நீளம் 4 அடி உயர பீடத்தில் 2 ½ x 2 ½ அடி அளவுள்ள பேரறிஞர் அண்ணா திருஉருவ வெண்கலச்சிலை அமைக்க, தாராபடவேடு நகராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், அரசாணை நிலை எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை நாள் 20.11.1998–ல் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, நகராட்சி மாமன்றம் மூலம் மேற்படி சிலையினை நிறுவ தாராபடவேடு நகராட்சிக்கு அனுமதி வழங்கலாம் என வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், வேலூர் மாவட்டம், தாரரபடவேடு மூன்றாம்நிலை நகராட்சி அலுவலக வளாகத்தில் “பேரறிஞர் அண்ணா” அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவுவதற்கு, தாராபடவேடு மூன்றாம்நிலை நகராட்சி நகர்மன்றம் தீர்மானம் எண்.248, நாள் 29.9.2009–ல் நிறைவேற்றப்பட்டது எனவும், தாராபடவேடு மூன்றாம் நிலை நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில், பேரறிஞர் அண்ணா திருஉருவச் சிலை வைப்பதற்கு செலவீனம் முழுவதும் தாராபடவேடு மூன்றாம்நிலை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளப்படுகிறது எனவும்,

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரையின்படி, அரசாணை நிலை எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை, நாள் 20.11.1998–ல் உள்ள நிபந்தனைகளையும் சேர்த்து விதித்து, தாராபடவேடு மூன்றாம் நிலை நகராட்சி அலுவலக வளாகத்தில் "பேரறிஞர் அண்ணா" அவர்களின் முழுஉருவ வெண்கலச் சிலை நிறுவுவதற்கு அனுமதி அளிக்கலாம் என அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளதை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அரசாணை நிலை எண்.221, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை, நாள் 20.11.1998–ல் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, தாராபடவேடு மூன்றாம்நிலை நகராட்சி தீர்மானத்தின் அடிப்படையில், வேலூர் மாவட்டம் தாராபடவேடு மூன்றாம் நிலை நகராட்சி அலுவலக வளாகத்தில், நத்தம் சர்வே எண்.533/14, 0.16 ஏக்கர் விஸ்தீரணத்தில், பிரதான நுழைவு வாயில்களுக்கு இடையில் "பேரறிஞர் அண்ணா" அவர்களின் வெண்கலத்தினாலான முழுவுருவ சிலை நிறுவ மேற்படி நகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>

மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம், வேலூர்.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
நகராட்சி ஆணையர், தாராபடவேடு மூன்றாம் நிலை நகராட்சி, வேலூர் மாவட்டம்.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்,
சென்னை– 600 009.
அரசுச் செயலளரின் தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9.
இ.கோ/ உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**